உ

முருகன் றுணை

பினாங்குக்கு அடுத்துள்ள

தைப்பிங்குநகர் தண்ணீர்மலைத்

தண்டாயுதமுருகன்பதிகம்.

இது

நெடுவை வித்வான்

திரு. இராமஸ்வாமிஐயங்கார் அவர்களால்

இயற்றப்பெற்று

வலயமாநகரம்

ஆவி. சித. சிதம்பரஞ்செட்டியார் அவர்கள்

குமாரன்

சாமிநாதன் செட்டியாரால்

கோனாபட்டு

தனவைசியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

நள-௵ வைகாசி-மீ

பிரதிகள் 300] 1916 [விலை 0-1-0

உ

முருகன் றுணை.

பினாங்குக்கு அடுத்துள்ள

தைப்பிங்கு நகர் தண்ணீர்மலைத்

தண்டாயுதமுருகன்பதிகம்.

இது

செந்தமிழ் வித்வான்

திரு. இராமஸ்வாமிஐயங்கார் அவர்களால்,

இயற்றப்பெற்று

வலயமாநகரம்

ஆவி. சித. சிதம்பரஞ்செட்டியார் அவர்கள்

குமாரன்

சாமிநாதன் செட்டியாரால்

கோரப்பட்டு

தனவைசியன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

இராக்ஷஸ-ஹூ பங்குனி-மீ

காப்பிகள் 300.

1016

சிறப்புப்பாயிரம்.

மகிபாலன்பட்டி வித்வான் மு. கதிரேசன் செட்டியார்
அவர்களால் இயற்றப்பட்டது.

வெண்பா.

செல்வமலி தைப்பிங்கிற் சேரெந் திருமுருகற்
கல்கவிலாச் சீர்ப்பதிக மாக்கினான் — நல்கும்
இறைதமிழ்நன் றாய்ந்த இராமநா மங்~~கோன்~~ கொள்
மறையவன்மா லன்பன் மகிழ்ந்து

உ

ஸ்ரீ

முருகன் துணை.

தைப்பிங்கு நகரிலெழுந்தருளியிருக்கிற

ஸ்ரீ. தண்டாயுதமுருகன் பதிகம்.

விநாயகர்

காப்பு.

நேரிசை வெண்பா

மங்களஞ்சேர்த் தைப்பிங்கு மாநகரில் வாழ்க்கைமிகப்
பொங்குந் தனவணிகர் போற்றிசெயத்—தங்கும்
முருகன்றண் டாயுதவேள் முன்பதிகம் பாட
வருமென்னோன் முன்னோன் மகிழ்ந்து

அவையடக்கு

நேரிசை வெண்பா

தைப்பிங்கு வாழுந் தமிழ்க்குமரன் கொண்டுவப்பான்
எய்ப்பின் கிலாதே னிசைபதிகம்—கைப்பின்றித்
தெய்வப் பிடியையுந்தென் றேர்குறவர் மானினையும்
கைவைத்த மைந்தராக

நூல்.

சீர்கொண்ட செங்கமல மகன்றா மகன்மரை
  சிறக்குமக ளிவர்க ளன்பிற்
செரியுமண வாளராந் தேவபொரு ளுமைநாற்
  றிதிதோற்ற முள்ளொளி ரிக்கர்
சேர்கொண்ட வுலகுதனி னிமைபபான்ம வர்க்கங்க
  ளெவையுநினை யவரின் மேலா
யிலகுபர மானபொரு ளிவ்வு நவமைந்தெ தன
  எண்ணவரு வதன முடனே
தார்கொண்ட புயவரைகள் தங்கவற் றினிமிட்டு
  சார்ந்துபிர ணவ ரூபமாந்
தண்ணிழற் றருகைமே னண்ணிவெய ருகர் மூலவு
  சாமிகுக நாத வருள்வாய்
தார்கொண்ட தண்பொழிற் றைப்பிங்கு நகர்மேவு
  தனவணிகர் தினமு மோங்கிச்
தனதனென வொளிர்தரப் புனல்வரையி லுறைதிருத்
  தண்டா யுதக்கு மரனே. க

திருவாழ்வு நாளுஞ் சிறக்கவளர் வியாபார
  செயசீல ராகி யிந்தச்
செகமுழுவ துந்தரும மேபுரிந் திந்தியா
  தேசம் புரக்குமன்னர்
பெருமாண் புறக்கொள்வர் பின்னராய் நன்னர்வாய்
  பிடசான் றந்தனார்
பெறுமறையினைறைதருத மாபளித் திடுதூய
  பெற்றிசால் வணிகர்சைவ

ஒருவாள ராகுநாட் டுக்கோட்டை நகரத்த
வுத்தமர்செய் பத்தி யுத்தி
போங்குமவர் பொருளீட்டு பாங்கெலாஞ் சென்றுசென்
றுதவு தூக நாத னருள்வாய்
தருநீடு தலமென்ன வொளிகொள்ளைப் பிக்குவாழ்
தனவணிகர் தினமு மோங்கித்
தனதனென்ன வொளிர்தரப் புனல்வயலி லுறைதிருத்
தண்டா யுதக்கு மரனே. ௨

சந்தமு முந்தனிரு செஞ்சரண பங்கயந்
தமைநினையு மவர்க டம்பாற்
சற்றேனு மளவளவல் பெற்றேனி லன்னினைச்
சீற்றுநூல் சிறிது மறியேன்
சிந்தையி லிரக்கம்நல் லீகையறி வுயர்வாய்மை
சென்மத் தும்யா னறிகிலேன்
ஸ்ரீ திலிக் துணையான பாதக னெனக்குநிகர்
ஜெகதலத் தொருவ ருண்டோ
சுந்தர மைந்தருஞ் சசிவள்ளி கொஞ்சி மகிழ்
துரையழக னேமயிலின் மேற்
றோன்றும்வே லாவுமையி னன்றபாலகுகா
துணையாக வந்தருள்செய்வாய்
தந்திமிகு நந்தனத் தைப்பிங்கு வளநகர்த்
தனவணிகர் தினமு மோங்கித்
தனதனென வொளிர்தரப் புனல்வயலி லுறைதிருத்
தண்டாயுதக் குமரனே. ௩

எண்ணியுந கிடுநம்ப ரிதயத் தடத்தூறு 0
இன்பரஸ வெள்ள மயமே
இமையோர்க்கு மறிவரிய இமயம் பயந்தபிடி
இனிதூட்டி யாட்டி கன்றே ஞேக்கி]
வண்ணமுறு கண்ணுதல்தன் மார்பில்வைத் தெழி
மகிழுமறு முகநன் மணியே
மறைபுகல் சடாக்கரத் துறைசெய்பஞ் சாமீத
வளருமாண் டிறல்கொள் சுகமே
புண்ணிய நிறைந்தகார்த் திகைமுதல வாறுநாட்
பூவையர்கை யேந்து முத்தே
புநேடாத் தமன்மருக வெருடூர்த் தெனக்கீருள்க
பூஞ்சரவ ணோற்பவ குகா
தண்ணியல் மிதந்தசீர்த் தைப்பிங்கு வளநகர்த்
தனவணிகர் தினமு மோங்கித்
தனதினை வொளிர்தரப் புனல்வளையி லுறைதிருத்
தண்டாயுதக் குமரனே. ௪

அண்டகோ டிகள்முழுது நடுநடு நடுங்கவே
ஆர்ப் பரித்ததட்டி யார்க்கும்
அடாதன புரிந்துலகர் படாதென படப்புரியும்
அவுணர்தொகை மாய வேலாற்
கண்டகண் டஞ்செய்து கழுகலகை நாய்நரி
களித்துண விருந்த ளித்துக்
காற்றினிற் பஞ்செனத் தூற்றியிட் டமரரைக்
கூர்த்தரண வீர துங்கா

சண்ட வெங் கிரணமணி நிறைபணிக டலைபீடறு
　　சரணமுறு மயில் வாகனை
சாமிசண் முகவபி ராமிநன் கருளுதக
　　சமயமிது வந்துதவுவாய்
தண்டலையின் மணம்வீசு தைப்பிங்கு வளநகர்த்
　　தனவணிகர் தினமு மோங்கித்
தனதனென வொளிர்தரப் புனல்வரையி லுறைதிருத்
　　தண்டாயுதக் குமரனே. ௫

அம்புவிழி மடமாத ராசைவாய்ச் சிக்கியான்
　　அலையிடைச்சுழல் திரணமாய்
அணிபொருள்கள் நில முணவு மனையா தரத்துடன்
　　அனைத்துநனி நாளு மீட்டிச்
சம்பிரம தாகவவை சதமெனச் சேமித்து
　　சாந்தகுண மேலோர் தமைச்
சற்றேனுமன்பின்றி பெற்றேறயிகழ்ந்திடுஞ்
　　சழக்கனேற் கறிவு முளதோ
நம்பியடைகுனர் தங்கள் துன்பந் துடைத்துமிக
　　நல்வாழ்வு தருமுருகனே
நம்பனருள் புதல்வனே யும்பர்கள் முதல்வனே
　　நளிர்செந்தில் நாதவருள்வாய்
தம்பநிறைமாடமொளிர் தைப்பிங்கு நகர்மேவு
　　தனவணிகர் தினமுமோங்கித்
தனதனென வொளிர்தரப் புனல்வரையி லுறைதிருத்
　　தண்டாயுதக்குமரனே ௬

தவயோக முறுமுனிவ ரிலேகர்சா ரணர்சித்தர்
சாந்தனென் னரிபக்கர்
சததள மலர்ப்பொருட் டுறைவேத னாதியோர்
தாங்கியருளென் றிரப்பச்
சிவநாம முடைய பார்தேவ னுமைமா னுபாற்
றிருக்கட் கடைக்கணுக்கஞ்
செய்யத்தன் ஒண்ணுதற் கட்பொறி யைவாயுவாற்
றிகழ்சர வணப்பொய் கையுட்
பவமாக வுய்க்கவே ராறுமுக மவைகொண்டு
பாலனாய் வளரு முதலை
பாங்கவுந் தன்னிரு பாதமே துணையென்று
பற்றினே னுற்றுதவுவாய்
தவசாக மலரெழில்செய் தைப்பிங்கு நகர்மேவு
தனவணிகர் தினமு மோங்கித்
தனதனென வெள்ளிந்தரப் புனல்வரையி னுறைதிருத்
தண்டாயுதக் குமரனே எ

செந்நெல்விளை குன்றைதண் பரங்கிரி திருத்தணிகை
செந்தில் கழுகாசலமுடன்
சீரலை வாய்பழநிபோகம் விராலிமலை
திகழ்செய்பழ முதிர்சோலையாம்
நன்னர்மிகு பலகோடி குன்றுதோ றாடல் கொளு
நாதனே வேதன்முனைநாள்
நளிபெறும் பிரணவத் தொருபொருளை யறியவவன்
நற்றலைதனிற் குட்டியே

பன்றாடல் ஓங்காரமாண்டையுபதேசித்த
மாஞானபோக குருவே
வள்ளிமணவாளனே புள்ளிமயில் வாகனா
வந்தெனக் கருளுமையா
தன்னிகரில் செல்வர்பலி ளைப்பிக்கு வளநகர்த்
தனவணிகர் தினமும் ஓங்கித்
தனதமென்னவொளிர்தரப் புனல்வரையி லுறை திருத்
தண்டாயுதக் குமரனே அ

வள்ளலுனை யநுதினமுமறவாது சிந்திக்கு
மனமெனக்கருளவேண்டும்
வந்தித் திடச்சென்னி புந்தித்திடத்தொடுனை
வாழ்த்த வாயுநவேண்டும்
கள்ளமின்றித் தொழுங் கையுநின் கோயில்சூழ்
காலும் பல்கால்வேண்டுநின்
கதைகேட்டுவக்குமிருசெவியுநின் ரூபமதை
காணுமிரு கண்ணும்வேண்டும்
தெள்ளுதமிழாதிபல பாஷைகளில் யான்மிகத்
தேர்ச்சியுள னாகவேண்டும்
திருவேண்டுமுன்னடியாருள் வேண்டுமுலகின்யான்
சிறப்புடன் வாழவேண்டும்
தெள்ளரிய வளமோங்குளைப்பிக்கு வளர்நகர்த்
தனவணிகர் தினமுமோங்கித்
தனதமென்ன வொளிர்தரப் புனல்வரையிலுறைதிருத்
தண்டாயுதக்குமரனே.

ஓஞ்சரவணோற்பவ குகா சண்முகா பதா
யுத்துவஜ கார்த்திகேயா
உத்துங்க சாமள மயூராரூடாவசுர
யுத்த ப்ரசண்ட சூரா
ஆஞ்சிவகுமாரா குஞ்சரிவள்ளி மோகனா
அச்சுதன் பிரிய மருகா
ஆசலூர் திக்கிளைய சோதராவுன்னையான்
அன்புடன் றுதிபுரிந்தேன்
வாஞ்சையுடனருள்செய்து நாணுறுமென்குலம்
வாழ்ப்பதுன் கடமை கண்டாய்
மங்காது கவிதன்னி லெங்குமின் றருள்பொழியும்
வரதனே விரதவேலே
தாஞ்சிவத் தன்பர் திகழ் தைப்பிங்கு வளநகர்த்
தனவணிகர் தினமும் ஓங்கித்
தன்தனன வொளிர்தரப் புனல்வரையினுறை திருத்
தண்டாயுதக் குமரனே. ௭

வாழ்த்து

ஒளிபெருகுமணிமகுட மிறைவதன மலர்களவை
ஓராறும் வாழ்கவாழ்க
உத்துங்கமான புயவரைகளீராறுடன்
உயரபயவரதம் வாழ்க
அளிபெருகு மிருவிழியினருளேனுக்கு நகையுநன்
கார்சத்தி வேலும் வாழ்க
அஞ்சிறைய மஞ்ஞையுங் காலாயுதக்கொடியும்
அன்புடமனைவியரும் வாழ்க

துளிபெருகு மதுநிறை கடம்பமலர் வாழ்காநந்
றொண்டர்கணம வாழ்க வாழ்கத்
தூயதிரு மாலாதி தேவரி ருடியர்களெண்
டோளரிய முகவர் வாழ்க
தளிபெருகு நன்பொழிற் றைப்பிங்கு வளர்நகர்த்
தலைவணிகர் தினமும் வாழ்கத்
தாரணி தனிற்பயிர்கள் வாழ்கமழை வாழ்கவுயர்
தானநலம் வாழ்க நன்றே.

தண்டாயுத முருகன்

துதி

கண்ணிகள்.

குருபர குருபர குகநாதா
அருள் தரு சண்முக முருநீதா
சத்திச் சரவண பவகுகனே

முத்தித் திருவாழ்வருள்சுகனே
திங்கட் சடிலன் றன் பாலா (வளம்)

பொங்குந் தைப்பிங்கு நகர் வேலா
பச்சை நிறத்துன்ம மகிழ் குமரா (கொடுஞ்)

செச்சை யடக்கிடு முயர் சமரா.
திருமால் மனமகிழ் எழில் மருகா (சிவ)

குருநாதா சண்முக முருகா
அன்பர்க்கருள்கரு ணாகரனே (புவி)

இன்புற்றருளிருந் திவாகரனே
காலாயுத துவசக் கையா (இனும்)
நாலா வரமருள் வேற் கையா
சூரர்கள் காலா சுரபாலா (ரண)
தீர வுதார ரஸ்லீலா
வள்ளி குஞ்சரியின் மணவாளா (நல்ல)
புள்ளி மயூரா மலர்த்தாளா
மங்கள மருள் கண்டாயுதனே
இங்கெனை யாளும் வேலாயுதனே.

எச்சரீகை

(1) சீராருந் தைப்பிங்கு நகர் சேர்ந்த கந்தநாதா
ஏரார் புயமீராறுகொள் இறைவா—எச்சரீகை.

(2) சூராதியருடலந்தெறு சூராரணதீரா கை.]
காரார் குழற்பிடிவள்ளி தன்கணவா—எச்சரீ
லா [

(3) கொந்தார் குழலுமையாள் தருங்குமரா வடிவே
கந்தா சரவண வுற்பவகருணா—எச்சரீகை.

(4) சந்தானமும் பொருள்வாழ்வுந் தழைக்குந் கண
வணிகர்]
வந்தார்ந்த தைப்பிங்கு நகர்வரதா—எச்சரீகை

லாலீ

ஆறுமுக வேலா. லாலீ தைப்பிங்கில்
அமர்ந்த முருகேசா. லாலீ.
ஏறுமயில் வாகா. லாலீ குஞ்சரியோ
டிசைவள்ளிபாகா. லாலீ

பேறுதவு குமர லாலீ நுதல்விழிப்
பெம்மான் புதல்வ. லாலீ
வீறுபெறு செட்டி. லாலீ வியன்மயிலில்
மேவுகுக லாலீ லாலீ.

ஊஞ்சல்.

மதியிருக்குஞ் சடைமுடி வானவனுமீசன் ட்ட]
மகிழ்ந்தொரு பாலிருந்தெழில் கொள் வடந்தொட்டா
நதியிருக்குமலைமகளா மன்னை நின்னை
நயந்து முத்தி கொடுத்தொரு பால்வடந்தொட்டாட்ட
நுதியிருக்கும் பிறை நுதற்கார்த்திகை முன் தாயார்
நுகரமிழ்திற்பாடல் பலநுவலத் தைப்பிங்
பதியிருக்கும் குமரகுக ஆடீரூஞ்சல்
பால வள்ளிலோல மகிழ்ந்தாடீரூஞ்சல்

மங்களம்.

மங்களம் மங்களம்
முருகனுக்கு
மங்களம் மங்களம்.

மங்களம் தைப்பிங்கு நகர்
வாழுந் தண்டாயுதபாணி
பொங்குங்கிருபை தங்கவரும்
புண்ணிய தனவணிகர்கட்கு
மங்களம்,

வள்ளிதெய்வயானைமகிழ்
மந்தகாச முருகனுக்கு
தெள்ளியோர் புகழும் செடுவை
திருராம கவிஞனுக்கு

மங்களம்.

தண்டாயுதமுருகன்
பதிகம் முற்றிற்று.

[illegible]

[illegible]

ரூ 250

[illegible] 302 [illegible]